மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களை அப்கிரேடு செய்வது எந்த அடிப்படையில்? என்னுடைய தொகுதியில் கூட புஞ்சைபுளியம்பட்டி என்பது முனிசிபாலிட்டி ஆகின்ற நிலைமையில் உள்ள இடம். ஆகவே அதே போல் நம்பியூர் போன்ற இடங்களில் எல்லாம் அப்கிரேடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எழுதி கொடுத்தோம். இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் தெரியவில்லை. ஆகவே அப்கிரேடு செய்வது எந்த அடிப்படையில் எதை வைத்து செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்றும் நாங்கள் கேட்டு இருக்கின்ற என்னுடைய தொகுதியில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்கிரேடு செய்வது அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற ஜனத்தொகை, எவ்வளவு நோயாளிகள் வருகிறார்கள், அருகில் என்ன என்ன மருத்துவ மனைகள் இருக்கின்றன, இதையெல்லாம் கணக்கில் வைத்து நாம் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றத்தின் மூலமாக அவருக்குப் பதில் வேண்டுமென்று சொன்னால் அவர் தனியாக கேள்வி எழுப்பினால் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 386, திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

386—

சென்னை அசோக்நகர் அரசு எலும்பு சிகிச்சை நிலையத்தை விரிவுபடுத்தல்.

*9992— திரு. எஸ். ஜெயக்குமார் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராயநகர் தொகுதி, அசோக் நகரில் உள்ள அரசு எலும்பு சிகிச்சை நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கே.கே. நகரில் புனரமைப்பு மருத்துவ ஆராய்ச்சி நிலையம் இயங்குகிறது. இந்நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, இது Orthopaedic Research Centre என்று அழைக்கப்படுகிறது. இங்கே நம்முடைய தமிழ் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, வெளி மாநிலத்திலிருந்து எல்லாம் இங்கே வந்து இந்த இன்ஸ்ட்டிடியூட்டில் சிகிச்சைப் பெறுகிறார்கள். இது பரவலாக நல்ல இன்ஸ்ட்டிடியூட் என்று சொல்லப்படுகிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். இதை மீண்டும் மறுபரிசீலனை செய்து விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல இன்ஸ்ட்டிடியூட் என்று சொல்லப்படுகிறது என்பதல்ல. அப்படிதான், அது தான் உண்மை. எனவே அதை விரிவுபடுத்துவதற்கு நிதி நிலைமைக்கு ஏற்ப நாம் நடவடிக்கை எடுக்கலாம். விரிவு படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரிகிறது. ஏற்கனவே இருக்கின்ற வசதிகளை வைத்து இப்போது முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பான சேவையை அந்த இன்ஸ்ட்டிடியூட் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, தேவை ஏற்பட்டால் நிதிநிலைமைக்கு ஏற்ப வருகின்ற காலங்களில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இன்ஸ்ட்டிடியூட்டில் செவிலியர்கள், மருத்துவர்கள் அதிகம் இல்லை என்று சொல்லப்படுகிறது. காரணம் போஸ்ட் கிராஜிவேட் படிக்கின்ற மருத்துவர்களை இரவு நேரங்களில் போஸ்ட் செய்கிறார்கள். காரணம் கேட்டால் டாக்டர்கள் வசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே செவிலியர்களையும் மருத்துவர்களையும் அதிகமாகப் போஸ்ட் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மருத்துவமனையிலேயும் ஒரு நார்ம்ஸ் வைத்து அதற்கேற்பத்தான் படுக்கை வசதிகள் எவ்வளவு இருக்கின்றன போன்றவற்றையெல்லாம் கணக்கு வைத்துத்தான் செவிலியர்களாக இருந்தாலும், மருத்துவர்களாக இருந்தாலும் நாம் இடங்களை உருவாக்குகிறோம், அந்த அடிப்படையிலேதான் இப்போது உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதிலே ஏதாவது பற்றாக்குறை இருக்கிறதென்ற நிலை ஏற்படுமேயானால் அதை ஈடு கட்டுவதற்கான ஏற்பாட்டை நாம் செய்யலாம். அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அந்த இன்ஸ்ட்டிடியூட்டினுடைய டைரக்டரை அழைத்துப் பேசி தேவை ஏற்படின் நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு எம். கே. பாலன்.

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை கே. கே. நகரில் உள்ள எலும்பு சிகிச்சை நிலையத்தில் எலும்பு முறிவுக்கு புத்தூர் கட்டு போட்டு வைத்தியம் பார்க்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புத்தூர் கட்டு வேண்டுமென்றால் புத்தூருக்குத்தான் போயாகவேண்டும். அதை இங்கே போட முடியாது. புத்தூரைவிட சிறப்பான கட்டு இங்கே போடப்படுகிறது. எனவே, அதை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. இராம. இராமநாதன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துவிட்டு தற்போது நாகை - காயிதே மில்லத் மாவட்டத்தில்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசு எலும்பு சிகிச்சை நிலையத்தைப் பற்றிய கேள்வி இது.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தப்

பட்ட கேள்வி. மாவட்ட தலைமை மருத்துவமனையாக, குடந்தை மருத்துவமனையை தஞ்சை மாவட்ட தலைமை மருத்துவமனையாக ஆக்குகின்ற ஒரு செயற்குறிப்பு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவமனை என்று வந்துவிட்டாலே எல்லா மருத்துவமனைகளுக்கும் சம்பந்தம் வந்து விடுகிறது என்று கருதி விடக்கூடாது. எனவே, அது சம்பந்தமாக தனியாகக் கேள்வி போட்டால், அதற்குரிய பதிலைத் தருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Institute of Orthopaedic Research Centre மற்ற இடங்களிலே நிறுவுவதற்கு நிதிநிலை சரியில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஒத்துக்கொள்ள வேண்டிய விஷயம். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலையைப் பார்க்கிற பொழுது, எலும்பு சம்பந்தப்பட்ட நோய்கள் மிகப் பரவலாக காணப்படுகிறது. ஆகவே, அதிக நிதி செலவு இல்லாமல் மாவட்ட மருத்துவமனைகளில் இதற்கென்று, Feeding Centres to the Central Institute ஏற்பாடு செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படித்தான் இருக்கிறது. அந்தந்த மருத்துவமனைகளிலே, இங்கே சென்றாக வேண்டுமென்று இருக்கிற நோயாளிகளை அந்தந்த மருத்துவர்கள் இங்கே போக வேண்டுமென்று ரெப்ஃபரன்ஸ் லெட்டர் கொடுக்கிறார்கள். அப்படி மருத்துவர்கள் கொடுக்கிறபோது, இந்த இன்ஸ்டிடியூட்டுக்கு வருகிறபொழுது இந்த இன்ஸ்டிடியூட்டிலே இருக்கிற மருத்துவர்கள் அதற்குத் தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எனவே, அதற்கு தனிப்பட்ட சர்க்குலரோ அல்லது தனிப்பட்ட ஏற்பாடோ அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால் முறிவுகளோ அல்லது எலும்பு முறிவுகளோ ஏற்பட்டால் மாவு கட்டு மிகப் பயங்கரமாக அரசு மருத்துவமனைகளிலே போடுவதால் நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, புத்தூரிலே பச்சை இலை கட்டு போடுகின்ற தன்மைகளைப் பார்க்கின்றபொழுது நிறைய நோயாளிகள், இந்த மாவுக் கட்டைவிட அங்கே போய் சிகிச்சை பெறுவது நலம் என்று கருதி அங்கே செல்கிறார்கள். ஆகவே, அரசு மருத்துவ மனைகளிலேயும் அந்த மாவுக்கட்டுகளை மிகக் கனமாகப் போடுவதைத் தவிர்க்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவு கட்டு கனமாக போடுவதற்குக் காரணமே, இரண்டு மாத காலமோ அல்லது ஒருமாத காலமோ முறிந்த எலும்பு அந்த இடத்தை விட்டு நகராமல் இருந்தால்தான், ஒழுங்காக அந்த முறிந்த இடம் கூடும் என்பதற்காகத்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே அது பயங்கரமான கட்டு அல்ல. ஒரு வார காலத்திற்கோ அல்லது 15 நாட்களுக்கோ எவ்வளவு நாள் மருத்துவர்கள் சொல்கிறார்களோ அவ்வளவு நாள் மட்டும்தான் அந்த கட்டு போடுவதால் சிரமம் இருக்கும் புத்தூரிலே போடுகிற கட்டிலே வாழ்க்கை பூராவும் சிரமம் ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால்தான் அதை இங்கே நாம் கடைப்பிடிப்பதில்லை. எனவே, அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. ஏற்கெனவே, இவையெல்லாம் பெரிய ஆராய்ச்சிக்கு இடையிலே பெரிய பெரிய மருத்துவர்கள் கண்டுபிடித்து செய்கிற காரியம். எனவே, அதிலே நாம் தலையிடக் கூடாது. மருத்துவர்கள் என்ன சொல்கிறார்களோ அதைக் கேட்பது நமக்கு நல்லது என்று கருதுகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 387, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

387—

ஆலங்குடி மருத்துவமனைக்கு பெண் மருத்துவர், பல் மருத்துவர் ஆகியோர்களை நியமித்தல்.

*12544—திரு. எஸ். சண்முகநாதன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—